# சென்னையில் 80 டன் பட்டாசு கழிவுகள் அகற்றம்

**சென்னை**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உருவான 80 டன் பட்டாசுக் கழிவுகளை மாநகராட்சி நிர்வாகம் நேற்று அகற்றியது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் 5,300 டன் குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றன. இப்பணியில் 19,000 துப்புரவுத் தொழிலாளர் ஈடுபட்டு வருகின்றனர். தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, 80 டன் பட்டாசுக் கழிவுகள் நேற்று அகற்றப்பட்டன. அவை, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அறிவுறுத்தலின் படி, கும்மிடிபூண்டி அருகில் உள்ள அபாயகரமான கழிவுகளை சேகரிக்கும் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.